# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் — 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 11 | 24-04-2003 | வியாழக்கிழமை | ஓசை 65



வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical

கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்திய துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்.

வவுனியா ஒப்டிக்கல்,
30 பஸ் நிலையம்,
வவுனியா. (சி-7854)


## பேச்சுவார்த்தை இடைநிறுத்த முடிவு சாலச்சிறந்த சமயோசித முடிவு!

### மன்னார் மறை மாவட்ட ஆயர் வண. இராயப்பு ஜோசெப் ஆண்டகை

(மன்னார்)

சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப்புலிகள் தற்போதைக்கு பங்கேற்கப் போவதில்லை என்று விடுதலைப்புலிகளின் தலைமைத்து வம் தீர்மானித்திருப்பது சாலச் சிறந்த சமயோசித முடிவு என்று மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோசெப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகள் மீதான அக்கறை அரசாங்கத்தின் செயற்பாடுகள் வெறும் பேச்சளவில் (08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ தேசியத்தலைவருக்கு யாழ். இளைஞர்கள் விருது

ஆனையிறவு இராணுவத்தளத்தை வெற்றிகொண்ட நினைவு நாளை ஒட்டி யாழ். இளைஞர்கள் தமிழீழ தேசியத் தலைவருக்கு நினைவு விருதினை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 28 ஆம் திகதி பளையில் இடம்பெறவுள்ள வெற்றி விழாவில் விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளிடம் இந்த விருது கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியமும் இதுபோன்ற நினைவுப் பரிசொன்றை தமிழீழ தேசியத் தலைவர் அவர் களுக்கு வழங்குவதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போர்நிறுத்தத்தைச் செயற்படுத்துவதில் நாம் மிகவும் உறுதியாகவே உள்ளோம்!

### புலிகள் தம்மிடம் தெரிவித்துள்ளதாக கண்காணிப்புக் குழுவின் உபதலைவர் தெரிவிப்பு

**விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வது இல்லை என்று கடந்த திங்களன்று அறிவித்த நிலையில் போர் நிறுத்தத்தை செயற்படுத்துவது தொடர்பாகவும் அமைதி வழிமுறை மற்றும் பேச்சுவார்த்தைகள் பற்றியும் தாங்கள் மிகவும் உறுதியோடு இருப்பதாக விடுதலைப்புலிகள் தங்களிடம் தெரிவித்துள்ளதாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் துணைத் தலைவர் கோல்றூப் கொக்லண்ட் பி.பி.ஸி.க்குத் தெரிவித்துள்ளார்.**

இந்நிலையில் எல்லாம் வழமை போல இருப்பதாகவே கொள்ள வேண்டும் என்றார் அவர்.

அப்படியானால் இன்று ஓமந்தையில் நடைபெறவிருந்த விடுதலைப்புலிகளுக்கும் அரசதரப்புக்குமிடையிலான சந்திப்பு ஏன் பிற்போடப்பட்டது என்று கேட்டபோது,

அப்படி ஒன்றுமல்ல அதற்கும் பேச்சுவார்த்தையில் பங்கேற்பதை விடுதலைப்புலிகள் இடைநிறுத்தி வைப்பதற்கும் நேரடியாகத் தொடர்பு எதுவும் இல்லை. ஏற்கனவே யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு சார்பில் சில ஆவணங்களை தயாரித்துக் கொண்டிருந்தோம். அதற்கு எதிர்பார்ப்பதைவிட சற்று அதிகநேரம் பிடித்திருக்கிறது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் விவகாரக்குழு மீண்டும் ஐரோ.பயணம்!

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் குழுவினர் தமது பதினெட்டு நாள் பயணத்தை இன்று கிளிநொச்சியில் ஆரம்பிக்கின்றனர்.

இவர்கள் இம்முறை சுவிஸ்லாந்து, பெல்ஜியம், ஸ்பெயின், ஜேர்மன் ஆகிய ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் இக்குழுவினர் இந்நாடுகளில் உள்ள அரசியல் அதிகாரப் பகிர்வுகள் பற்றி ஆராய உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவினர் அண்மையில் ஸ்கன்டிநேவிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டு அங்குள்ள அரசியல், அதிகாரப் பகிர்வுகள் பற்றி ஆராய்ந்தது குறிப்பிடத்தக்கது. (வே)

## இன்று அமைச்சர் சந்திரசேகரன் தமிழ்ச்செல்வன் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

மலையக மக்கள் முன்னணி அமைச்சர் சந்திரசேகரன் அவர்கள் இன்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்திக்கவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (பா)

## இனவாதிகளின் பிரசாரத்திற்கு புலிகளினால் முற்றுப்புள்ளி!

### - தேசிய சமாதான பேரவைத் தலைவர் ஜெகான் பெரேரா

(கொழும்பு)

நாடு முழுவதும் விடுதலைப் புலிகளுக்கு தாரை வார்க்கப் பட்டுவிட்டதாகக் கூறும் இனவாதிகளின் கூற்றுக்கு விடுதலைப்புலிகள் முற்றுப்புள்ளி வைத்துள்ளதாக தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையை இடைநிறுத்தியுள்ளமை தொடர்பாகக் கருத்துக் கூறிய அவர் தெற்கிலுள்ள மக்களுக்கு உண்மையை விளக்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பென்றும் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளின் பொழுது விடுதலைப் புலிகள் அரசினால் ஓரம் கட்டப்பட்டமையே அவர்கள் இவ்வாறான முடிவுக்கு வருவதற்கு காரணம் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, பேச்சுவார்த்தை மேசைக்கு விடுதலைப்புலிகளை மீண்டும் கொண்டு வருவது அரசாங்கத்தின் பொறுப்பே என்று மாற்றுக் கொள்கை நிலையத்தின் தலைவர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து கூறியுள்ளார்.

## கடற்புலிகள் - கடற்படையினர் ஓமந்தையில் மே - 7ல் சந்திப்பு!

### கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடல் போக்குவரத்து தொடர்பாக ஆராய்வதற்காக கடற்புலிகளுக்கும் சிறிலங்கா கடற்படையினருக்கும் இடையில் ஓமந்தையில் இன்று நடைபெற இருந்த சந்திப்பு மே மாதம் ஏழாம் திகதி நடைபெறும் எனப் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடலில் ஏற்படும் போர் நிறுத்த மீறல்களைத் தடுக்கும் நோக்கில் கண்காணிப்புக் குழு முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பாக இச்சந்திப்பில் ஆராயப்பட இருந்தது.

இச்சந்திப்புக்கு முன்னோடியாக (08ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவத்துடன் செயற்பட்டுவந்தவர் துன்னாலையில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு வந்த ஒருவர் நேற்று பருத்தித்துறை-துன்னாலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது உடல் கழுத்தில் வெட்டுக்காயத்துடன் கைகள் வாய் கட்டப்பட்ட நிலையில் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டது.

53 வயதான இவர் சிறிலங்கா இராணுவத்தின் தொண்டர் படை உறுப்பினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து நெல்லியடி பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## மட்டு.கிரான் பிரதானவீதியை படமெடுத்த இளைஞர் கைது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கிரான் பகுதியிலுள்ள பிரதான வீதியை வீடியோப்படமெடுத்த இரண்டு இளைஞர்களை இராணுவத்தினர் கைது செய்து வாழைச்சேனைப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாக வாழைச்சேனை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் பயன்படுத்திய வீடியோ கமராவையும் ஓட்டோவையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

## - வவுணதீவில் 29ஆம் திகதி - புலிகள்-முஸ்லிம் பிரதிநிதிகள் திட்டமிட்டவாறு சந்திப்பர்

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையில் மட்டக்களப்பு வவுணதீவில் வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ள சந்திப்புத் திட்டமிட்டபடி நடைபெறும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

வவுணதீவு பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ள இச்சந்திப்பில் விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ் பிராந்திய அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## விடுதலைப்புலிகளின் அறிவிப்புக் குறித்து எதிர்க்கட்சித் தலைவர்கள் கூடி ஆராய்வு!


(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் விடுதலைப்புலிகளின் அறிவிப்புத் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூடி ஆராய்ந்துள்ளனர்.


இந்தச் சந்திப்பை அடுத்து நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு நாடாளுமன்ற விவாதத்தை உடனடியாக நடத்துமாறும் கோரி எதிர்க்கட்சிகளின் தலைவர்களின் கையொப்பம் இட்டு பிரதமருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் சிறிலங்கா பிரதமர் அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோருடன் ஆலோசனை நடத்தியதுடன் அடுத்த கட்டமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து ஆராய்ந்ததுடன் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்கெய்முடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து பிரதமருக்கு அமைச்சர்கள் இருவரும் விளக்கியதாக செய்திகள் வெளியானமை குறிப்பிடத்தக்கது.

# அன்புச் சோலை முதாளர் பேணலகத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு நிகழ்வு


மூதாளர் பாண்ட்வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுகின்றனர்.


மூதாளர் பேணலகத்தில் உள்ள ஒரு பகுதி மூதாளர்கள்


2ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் வெ. இளங்குமரன் அவர்கள் தமிழீழ தேசியக்கொடியை ஏற்றுகிறார்.



நிகழ்வில் உரைநிகழ்த்தும் றெஜினோல்ட் அடிகளார்


நிகழ்வில் சக்கர நாற்காலியில் உள்ள மூதாளர் ஒருவருக்கு வட போர்முனைக் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான ஜெரி பரிசில் வழங்குகிறார்.


நிகழ்வில் மூதாளர் ஒருவருக்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு இராசநாயகம் அவர்கள் பரிசில் வழங்குகிறார்.

படங்கள் : அ. வோகீசன்

- சிறுவர் கல்வியை விருத்தி செய்ய -

## வடக்கு - கிழக்கு பாடசாலைகளில் சிறுவர் அரங்க விழாக்கள்!

வடக்கு, கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கல்விகற்கும் ஆரம்பக் கல்வி சிறார்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் விருத்தியை ஏற்படுத்தும் வகையில் சிறுவர் நாடகங்களை உள்ளடக்கிய சிறுவர் அரங்க விழாக்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மாகாணக்கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

சிறுவர்கள் தமது மனவெழுச்சிகளை வெளிப்படுத்தி ஆளுமையினை விருத்தி செய்யும் வகையில் படைப்பாற்றல் மிக்கவர்களாக வளரச் செய்யும் நோக்கத்துடன் சிறுவர் அரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இச் சிறுவர் அரங்கு பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம் என நடாத்தப்பட்டு பங்குபற்றும் சகல சிறார்களுக்கும் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

மாகாண மட்ட சிறுவர் அரங்க விழா எதிர்வரும் யூன் மாதம் திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் நடத்தப்படவுள்ளன.

சிறுவர் அரங்க விழா தொடர்பான விபரங்களை அறிந்து கொண்டு சகல பாடசாலைகளும் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

## தடுப்பூசி ஏற்றல் பிற்போடப்பட்டது

(முல்லைத்தீவு)

கரைதுறைபற்று பிரதேச சபைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பு ஊசி ஏற்றும் நடவடிக்கை பிற்போடப்பட்டுள்ளது.

முன்னர் அறிவிக்கப்பட்ட திகதிகளில் வழங்கப்படவிருந்த நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படும் தினம் பின்னர் அறிவிக்கப்படும் என கரைதுறைபற்று பிரதேசசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## உபஅஞ்சல் அலுவலகம் சொந்த இடத்தில்

(அலுவலக செய்தியாளர்)

முள்ளியான் உப அஞ்சல் அலுவலகம் இன்று முதல் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

இவ் உப அஞ்சல் அலுவலகம் இராணுவ நடவடிக்கை மூலம் இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பில் முல்லைத்தீவு அஞ்சல் அலுவலகத்துடன் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)

## சுகாதாரச் சீர்கேட்டைத் தடுக்க த.சு.சேவையினர் முறிகண்டி, மாங்குளத்தில் திடீர் பரிசோதனை

(அலுவலக செய்தியாளர்)

சுகாதாரச் சீர்கேடுகளைத் தடுக்கும்வகையில் தமிழீழ சுகாதார சேவையினரும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் இணைந்து முறிகண்டி, மாங்குளம் பகுதிகளில் நேற்று முன்தினம் வர்த்தக நிலையங்களில், உணவு சாலைகளில் திடீர் பரிசோதனையினை மேற்கொண்டனர்.

இந்நடவடிக்கையின் போது அப்பகுதி வியாபார நிலையங்கள், உணவுச் சாலைகளில் சுகாதாரச் சீர்கேட்டுடன் நடாத்தப்பட்ட உணவுச் சாலைகளும், காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்பெற்று வருகின்றமையும் கண்டுபிடிக் கப்பட்டது. விற்பனை நிலையங்க ளில் கைப்பற்றப்பட்ட காலாவதி யான உணவுப் பொருட்கள் அவ்விடத்திலே வைத்து அழிக்கப் பட்டதுடன் சுகாதாரச் சீர்கேட்டுடன் முறிகண்டியில் இயங்கிய ஒரு உணவுச்சாலையும், மாங்குளத்தில் இயங்கிய இரண்டு உணவுச் சாலை களும் மேற்படி பிரிவினரின் உத்தர வின் பேரில் மூடப்பட்டதுடன், சம்பந் தப்பட்ட நிலைய உரிமையாளர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (சோ)

- தமிழீழ சுகாதார சேவையினரால் -

## "சார்ஸ்" நோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ சுகாதார சேவையினர் "சார்ஸ்" நோய் சம்பந்தமான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கையின் ஒரு கட்டமாக "சார்ஸ்" நோய் பற்றிய தகவல்கள், தடுக்கும் முறைகள், நோய்பற்றிய பல விடயங்களை சுகாதாரப் பிரிவினர் வெளியிட்டுள்ளனர். (லோ)


## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

08.04.2003 அன்று கிளிநொச்சிக் குளம் பாண்டியன் குளத்திற்கும் இடையில் பகல் 1.00 மணி அளவில் மருதலிங்கம் சகுந்தலாதேவி என்பவருடைய தேசிய அடையாள அட்டை உட்பட முக்கிய ஆவணங்கள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மல்லாவி வைத்தியசாலையின் நலன்புரி சங்கத்திடம் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுகொள்கிறோம். (2923)

## சாவு அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கிளிநொச்சியில் வசித்து வந்தவரும், கொழும்பை தற்காலிக வதிவிடமாகக் கொண்டவரும், அம்பாள் கபே, கொம்பனி வீதி, கொழும்பு உரிமையாளருமான கணபதிப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா 23.04.2003 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாகேஸ்வரி தம்பதியின் அன்பு மகனும், சந்திராவின் அன்புக் கணவரும், கீர்த்தனா, செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற குமரகுருபரன், காலஞ்சென்ற கணேசமூர்த்தி, குகானந்தன் (சுவிஸ்), ஆனந்தன் (குமரகுரு புடவை, அழகுபொருள் வாணிபம், கிளிநொச்சி) கலைச்செல்வி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்.
ஆனந்தன் (சகோதரன்)

முகவரி:
குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபம்,
கிளிநொச்சி.

(3160)

### தீச்சுவாலையின் தீ அணைக்கு நீராகக் கரைந்து விட்ட இரண்டாம் ஆண்டுகளின் நினைவில்

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 10 |  | 25 |
| 11 | | 04 |
| 1982 | | 2001 |

**2ம் லெப். அன்புவாணி**
(சோதியா படையணி)
கணேஸ் தமயந்தி (ஜமுனா)
கட்டுவன் மேற்கு தெல்லிப்பளை (யாழ்)

25.04.2003 நாளை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள நினைவஞ்சலி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதுவரை காலமும் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

த.முகவரி
239 பண்டிநர் குடியிருப்பு
1000ம் வீட்டுத் திட்டம்
முழங்காவில்

குடும்பத்தினர்.

(3159)

# ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லை; அவகாசம் தேவை என்கிறது அமெரிக்கா!

## கான்ஸ் பிலிக்ஸ் கடும் கண்டனம்

**ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்க தங்களுக்கு அதிகமான காலஅவகாசம் தேவைப்படுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. பல்வேறு தரப்புக்களின் வற்புறுத் தல்களுக்கு மத்தியில் இந்தப் பணியை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது.**

ஈராக்கை அமெரிக்கா, பிரிட்டன் படைகள் கைப்பற்றிக் கொண்டதன் பின்னர் அங்கு பேரழிவு ஆயுதங்கள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய அமெரிக்கா தீவிரமாக முயன்று வருகின்றது.ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்களின் முயற்சிக்கு புறம்பாக அமெரிக்கா தனது ஆயுதப்பரிசோதகர்கள் குழுவை இதற்காகப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் பேரழிவு ஆயுதங்கள் எவையும் இன்னமும் ஈராக்கில் கண்டுபிடிக்கப்படவில்லை என அமெரிக்கா அறிவித்துள்ள நிலையிலும் தொடர்ந்தும் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, அமெரிக்காவின் இந்த நடவடிக்கை குறித்து ஐ.நா. ஆயுத பரிசோதகர் குழுத் தலைவர் கான்ஸ்பிலிக்ஸ் கடுமையாக விமர்சித்துள்ளார். பேரழிவு ஆயுதங்களை வைத்துள்ள ஈராக் மீது குற்றச் சாட்டுக்களை தொடுத்து போரை முன்னெடுத்த அமெரிக்கா இதுவரை எந்த ஆயுதத்தையும் கைப்பற்றாமல் இருப்பது ஏன்? என்று அவர் வினாவெழுப்பியுள்ளார்.

பிலிக்ஸின் குற்றச்சாட்டை நிராகரிக்கும் அமெரிக்கா இப்போது தான் நாங்கள் பணிகளை ஆரம்பித்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளதுடன் பேரழிவு ஆயுதங்களை கண்டுபிடிக்க இன்னமும் கால அவகாசம் தேவையென தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க அமெரிக்கா தலைமையிலான ஆயுத ஆய்வுக் குழுவும், ஐ.நா.வின் ஆயுதக் குழுவினரும் இணைந்து ஈராக்கில் பணிகளை மேற்கொள்வது குறித்தும் உடன்பாடொன்றை எட்டும் வகையில் பேச்சுக்கள் நடைபெறுவதாகவும் கூறப்படுகிறது.

## ஒபசஞ்சோ மீண்டும் தெரிவு

நைஜீரியா நாட்டில் நடைபெற்ற சனாதிபதி தேர்தலில் ஒலிசிக்கண் ஒபசஞ்சோ மீண்டும் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சுமார் நாற்பது ஆண்டுகாலத்திற்கு பின்னர் சனநாயக முறையிலான பொதுத் தேர்தல் கடந்த 19ஆம் திகதி நடைபெற்றது.

ஒபசஞ்சோவுக்கு 62 சதவீத வாக்குகளும் எதிர்த்துப் போட்டியிட்ட முகமது புகாரிக்கு 32 சதவீத வாக்குகளும் கிடைத்தன.

## வலியுறுத்து

ஈராக்கிடமிருந்து மசகு எண்ணெயை பெற்றுக் கொண்டு உணவுப் பொருட்களை வழங்கும் திட்டத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபை உடனே நிறுத்தக்கூடாது என்று இத் திட்டத்தின் தலைவர் பெனான் செவோன் தெரிவித்துள்ளார். ஈராக்கில் பெருமளவான மக்கள் இத் திட்டத்தின் கீழ் உதவி பெறுவதால், இதனைப் படிப்படியாகவே நிறுத்த வேண்டும் என அவர் கூறியுள்ளார்.



உலகளாவிய ரீதியில் தற்போது எழுந்துள்ள 'சார்ஸ்' அச்சுறுத்தலால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள கொங் கொங்கில் பாதுகாப்புக் கவசங்களை அணிந்துள்ள மாணவர்கள்

# அமெரிக்கா எந்த நாட்டின் மீதும் இப்போது போர் தொடுக்காது!

## சனாதிபதி புஷ் கூறுகிறார்

ஈராக்கைத் தொடர்ந்து வேறு எந்த நாட்டின் மீதும் அமெரிக்கா இப்போது போர் தொடுக்காது என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் சதாம் ஹுசைன் அரசு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து அதன் அயல் நாடான சிரியா மீது அமெரிக்கா போர் தொடுக்கத் திட்டமிட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் இவ்வாறான கருத்து வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சிரியா இரசாயன ஆயுதங்களை வைத்திருப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டிவருகிறது.

ஆனால், ஈராக்கைத் தொடர்ந்து வேறு எந்த நாட்டின் மீதும் உடனடியாகப் போர் தொடுக்கும் திட்டமெதுவும் அமெரிக்காவிடம் இல்லை என்று சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் கூறியுள்ளார். பத்திரிகைச் செய்தியாளருக்கு பேட்டியளித்த புஷ் இதனைத் தெரிவித்ததாக 'நியூஸ் வீக்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.



காஸாவின் தென்பகுதி ரபா அகதி முகாம் தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்யும் பிரிட்டிஷ் சமாதான விரும்பிகள்.

# ஈராக்கின் பொருளாதாரத் தடை நீக்க தீர்மானத்திற்கு பிரான்சும் ஆதரவு

ஈராக்கில் சதாம் ஹுசைனை கவிழ்ப்பதற்கு அமெரிக்கா தலைமையில் நடத்தப்பட்ட யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த பிரான்ஸ், தற்போது ஈராக்கிற்கு எதிரான தடைகளை நீக்கும் யோசனைக்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்துள்ளது.

ஈராக் அதன் சொந்தக் காலில் நிற்பதற்கு அதற்கு உதவிதேவையென பிரான்ஸ் தெரிவித்துள்ளது. ஈராக் மீது கடந்த 12 வருடகாலமாக விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளுக்கு ஒரு முடிவுகாண அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சி வெற்றிபெற பிரான்சினால் இயன்றதைச் செய்வதாக அன் நாட்டின் வெளிநாட்டமைச்சர் தெரிவித்துள்ளார். துருக்கியில் வெளிநாட்டமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய போது பிரான்ஸ் அமைச்சர் இதனைத்தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மோதலைத் தடுக்க படை விரைவு!

ஈராக்கின் இனக்குழுக்களுக்கிடையே ஏற்படும் மோதல்களால்,அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நோக்குடன், மத்திய மொசுல் நகருக்குள் 2000 அமெரிக்கப்படை வீரர்கள் டாங்கிகளுடனும், கவச வாகனங்களுடனும் நுழைந்துள்ளனர். டிக்கிறிற் நகரில் ஆங்காங்கே துப்பாக்கிச் சண்டைகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன.

## புயல் தாக்கியது!

இந்தியாவில் மத்திய, தெற்கு அசாமில் நேற்று முன்தினம் வீசிய கடும் புயலில் குறைந்தது 40 பேர் இறந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது. அத்துடன் இக்கடும் புயலினால் நூற்றுக்கணக் கானவர் கள் காயமடைந்துள்ளதோடு பலர் காணாமல் போயுள்ளனர்.

மணிக்கு 80 கிலோமீற்றர் வேகத்தில் புயல்காற்று வீசியது.

# வைகோவுடன் தனியாகப் பேச கருணாநிதிக்கு அனுமதி மறுப்பு!

'பொடோ' சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் வை.கோ.வை திராவிட முன்னேற்றக்கழக தலைவர் கருணாநிதி கடந்த திங்களன்று சந்தித்துள்ளார்.கடந்த வாரம் வை.கோ.வைச் சந்திக்க மத்திய அமைச்சர்களும் கருணாநிதியும் முயன்ற போது தமிழக அரசு அதற்கு அனுமதி மறுத்திருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் வை.கோ.வை சந்தித்த கருணாநிதி அவருடன் ஏறத்தாழ முப்பது நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார்.

'பொடோ' சட்டத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் இணைந்து முன்னெடுக்க இருக்கும் போராட்டங்கள் குறித்தும் அச்சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வை.கோ தாக்கல் செய்துள்ள வழக்குக் குறித்தும் இரு தலைவர்களும் கலந்துரையாடி உள்ளனர். வை.கோ வை சந்தித்த பின் செய்தியாளர்கள் சந்திப்பில் கருணா நிதி பேசும் போது;

வை.கோ.வுடன் தனியாக உரையாடச் சிறை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. அத்துடன் வை.கோ.வுடன் பேசிக்கொண்டிருந்த போது பொலிஸ் அதிகாரிகள் அந்த உரையாடல்களை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தனர் என்று கூறினார்.



மலேசியாவில் பினாங் நகரில் 'சார்ஸ்' நோயால் இறந்தவரின் சடலத்தை அதிக பாதுகாப்பு முறைகளுடன் அகற்றும் வைத்தியசாலை ஊழியர்கள்.

# ஆட்சியில் கணிசமான பங்கு ஷியா முஸ்லிம்கள் கோரல்!

ஈராக்கில் கடந்த முப்பது ஆண்டுகளாக இருந்து வந்த தடையகன்று கர்பாலா நகரில் குவிந்திருக்கும் ஷியா முஸ்லிம்கள் புதிதாக அமையவிருக்கும் ஆட்சியில் தங்களுக்கு கணிசமான பங்கு தேவையென வலியுறுத்தியுள்ளனர்.ஈராக்கில் 60 சதவீதம் பேரைக் கொண்ட ஷியாப் பிரிவு முஸ்லிம்களுக்கு மறுக்கப்பட்டு வந்த வழிபாட்டு உரிமை தற்போது அளிக்கப்பட்டிருப்பதால் அப்பிரிவைச் சேர்ந்த லட்சக்கணக்கானோர் புனித நகரான கர்பாலாவில் குவிந்துள்ளனர். நபிகள் நாயகத்தின் பேரன் ஹுசைபினை நினைவு கூரும் முகமாக அவர்கள் சிறப்புத் தொழுகையில் ஈடுபட்டுள்ளனர். முஸ்லிம்களின் கோரிக்கைக்கு அமெரிக்காவும் இணக்கம் தெரிவித்துள்ளது.

# பயங்கரவாத ஊக்குவிப்புகளை நிறுத்தினால் அனைத்து விடயங்கள் பற்றியும் பேசத்தயார்

## மக்களவையில் இந்தியப்பிரதமர்

(புதுடில்லி)

எல்லை கடந்த பயங்கரவாதத்தை நிறுத்தி பயங்கரவாத முகாம்களை பகிஸ்தான் கலைத்து விடுமேயானால் ஜம்மு-காஷ்மீர் விடயம் உட்பட சகல விடயங்களும் பேசித் தீர்க்க உகந்த சூழ்நிலை உருவாகும் எனப் பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

சென்ற வார இறுதியில் மேற்கொண்ட ஸ்ரீநகர் விஜயத்தின் போது தாம் அறிவித்த புதிய முன்முயற்சி குறித்து நேற்று மக்களவையில் பிரதமர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே புதிய ஆரம்பம் உருவாகும் என்று வாஜ்பாய் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நேசக்கரத்தை இந்தியா முதலில் நீட்டியுள்ளது. பாகிஸ்தான் அதற்கு என்னபதில் கூறுகிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம் எனவும் அவர் கூறியுள்ளார்.

# இந்திய - பாகிஸ்தான் சமாதானத்தை நோக்கி...

● அ.கலைவாணி

"பாகிஸ்தானிடம் வலுவான ஏவுகணைகள் இருப்பதால், இந்தியா எம்மீது தாக்குதல் நடத்துமானால் நிச்சயம் தோற்றுப்போவது இந்தியாதான்" - என அண்மையில் பாகிஸ்தான் அறைகூவல் விடுத்துள்ளது.

மறுபுறம் அகிம்சையை உலகிற்கு அறிமுகம் செய்தமை எனும் பெருமையை தன்னகத்தே கொண்டுள்ள இந்தியா தான் கண்ணுக்குக் கண் பல்லுக்குப்பல் எனும் பழிக்குப்பழி வாங்கும் உணர்வுடன் பாகிஸ்தானிடம் போர்க்கொடி தூக்கிக் கொண்டிருக்கின்றது.

இந்தியா பாகிஸ்தான் எல்லையில், மனித உயிர்களின் மகத்துவம் என்பது வெறும் பூச்சியம் தான் போலுள்ளது. ஏனெனில் எல்லையில் அடிக்கடி ஏற்படும் மோதல்களும் அதை நிருபண மாக்கிக் கொண்டிருக்கின்றன.

அத்துடன் எல்லையில் ஏற்படும் பதற்ற நிலை சிறு தீ பெருநெருப்பாய், பாகிஸ்தானை ஒட்டியிருக்கும் மாநிலங்களிலும்அடிக்கடி எழும் மரண ஓலங்களும், துப்பாக்கிச் சத்தங்களும் சாதாரண சத்தங்களாகிவிட்டன அங்கு.

இரு நாடுகளிடமும் அணுவாயுதம் இருக்கின்றது. அதனைப் பறைசாற்றிக் கொள்வதில் இரு நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு முழங்கித் தள்ளுகின்றன..

எல்லையைத் தாண்டி இந்திய வீரன் ஒரு அடி வைத்தாலும் மூழ்கின்ற யுத்தம் சாதாரண யுத்தமாக இருக்காது. அது அணுவாயுதப் போராகத்தான் இருக்கும் என்று பாகிஸ்தான் அதிபர் முஷரப் சூளுரைத்துள்ளார்.

நான் மட்டும் என்ன சாதுவா... அணுவாயுதம் நீ எடுத்தால், என் கைகள் பூப்பறிக்காது. அதற்குப் பதிலாக வலிமைமிகு அணுவாயுதத்தைக் கையிலெடுக்கும் போது பாகிஸ்தானே வரைபடத்தில் காணாமல் போய்விடும் என்று இந்தியா உறுதிபட மார்பு தட்டுகிறது.

அணுவாயுதம் என்பது சாதாரண விடயமா என்ன... மற்றைய ஆயுதங்கள் போரில் பயன்படுத்துவதற்காகவே தயாரிக்கப்பட்டால், அணுவாயுதமோ.... பயன்படுத்தப்படாமல் இருப்பதற்காகவே தயாரிக்கப்படுகின்றது.

ஏனெனில், கோடி கோடியாய் பணத்தைக் கொட்டி அணுவாயுதம் தயாரிப்பதே, ஏனைய நாடுகளை மிரட்டி வைப்பதற்காகவே அணுவாயுதம் இருக்கும் நாடு என்று பெயர் எடுப்பது பெருமைக்குரிய விடயம் என்று நினைத்துத்தான் ஒவ்வொரு நாடும் அணுவாயுதம் தயாரிக்கவோ, பிற நாட்டிடம் வாங்கவோ முனைகின்றன.

இந்தவகையில் 1998 மே மாதம் வாஜ்பாய் பிரதமராகப் பொறுப்பேற்ற கையுடன் முதல் செய்த நற்செயல் தயாரித்த "புத்தர் சிரிக்கின்றார்" எனும் முதல் அணுகுண்டை வெடிக்க வைத்ததுதான்.

உலக நாடுகளின் எதிர்ப்புக்களையும் மீறி இக்குண்டு வெடித்தமையினால் பாஜ கட்சி கூறிக் கொண்ட சமாதானம் "பாகிஸ்தான் இனி எம்மிடம் வாலாட்ட மாட்டாது. அதற்காகவே இப்பரிசோதனை" என.

புத்தர் சிரிக்கின்றார் சங்கேத மொழியோடு வெடித்த அணுகுண்டின் புகை மண்டலம் மறைவதற்குள், பாகிஸ்தான் தன்னிடமுள்ள அணுகுண்டுகளால் உலகத்தையும் இந்தியாவையும் அதிர வைத்தது.

பாகிஸ்தானில் முதல் அணுகுண்டு வெடிக்கும் வரை, பாகிஸ்தானிடம் அணுவாயுதம் இருக்கின்றதா... அது தயாரிப்பில் தான் ஈடுபடுகின்றதா... என்பது உலக நாடுகள் என்ன பாகிஸ்தான் மக்களுக்கே கூடத் தெரிந்திருக்க மாட்டாது என்று அவதானிகள் அங்கலாய்க்கின்றனர்.

அணுவாயுதம் என்பதே சர்ச்சைக்குரிய விடயம். அதிலும் அணுவாயுதம் வைத்திருக்கும் நாடுகளைப் பொறுப்புள்ள நாடுகள்,பொறுப்பற்ற நாடுகள் என்று கூட வேறுபடுத்தி நோக்கப்படுகின்றது.

இந்தியாவோ தன்னை அணுவாயுதம் வைத்திருக்கும் பொறுப்புள்ள நாடாக உலகம் மெச்ச வேண்டும் என்பதற்காகவே, ஆயுதங்களைத் தேவைப்படும் போது பயன்படுத்த ஒரு தனி இராணுவப் பிரிவையும், அதனை இயக்கும் அதிகாரம் படைத்த ஆணையத்தையும் கடந்த பெப்ரவரியில் அறிவித்துள்ளது.

இதே போல் பாகிஸ்தானும் அறிவிப்புச் செய்யும் என்று இந்தியா எதிர்பார்த்தது. ஏனெனில் "பாகிஸ்தானில் அணுவாயுதம் பொறுப்பானவர்களின் கைகளில் இல்லை. யாரும் எதிர்பாராத வேளை அது ஏவப்படக் கூடும்" என உலக நாடுகள் இந்தியாவை எச்சரித்துள்ளமையே இதற்குக் காரணம்.

ஆனால், பாகிஸ்தானோ என்னை யாரும் பொறுப்புள்ள நாடாக நினைக்க வேண்டாம். பொறுப்பற்ற நாடாகத் தாராளமாகவே நினைத்துக் கொள்ளலாம் என்பது போல அசமந்தப் போக்கில் இருக்கின்றது.

அத்துடன் பாகிஸ்தானுக்கு வடகொரியா தான் ஏவுகணைகளை வழங்கி வருவதாகக் கூறப்படுவதால், அண்மையில் வடகொரியா 2000 கி.மீ தூரத்திலிருந்து 12000 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று தாக்கும் புதிய "தேப்போடாங்" ஏவுகணையைத் தயாரித்து விற்க இருப்பதாகக் கூறியுள்ளது.

இச் செய்தி இந்தியாவுக்கு தற்பொழுது புதிய சிக்கலையும், அலர்ஜியையும் ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில், பாகிஸ்தான் தேப்போடாங் ஏவுகணையைக் கொள்வனவு செய்யுமானால் அது இந்தியாவுக்கும் பெரும் தலைவலியாக மாறிவிடும். "மது அருந்திய குரங்கு கையில் நெருப்புக் கொள்ளியுடன் இந்தியாவின் முற்றத்தில் இருந்தால்..." என்னாகுமோ விபரீதம் எனும் தர்மசங்கட நிலைதான் தற்போது இந்தியாவுக்குத் தோன்றியுள்ளது எனலாம்.

அத்துடன், தேப்போடாங் எதிர்ப்புக் கருவி இஸ்ரேல் வசம் மட்டுமே உள்ளது. இதன் விலையோ 1000 கோடி ரூபாய்கள். இதனை இந்திய எல்லை முழுவதும் தான் நிறுத்தி வைக்க வேண்டும். இதற்குத் தேவையான லட்சம் கோடி ரூபாய்க்கு இந்தியா எங்கே போகும்...

அதனால் தான் இந்தியா யாரிடமும் நியாயம் கேட்டுப் பயனில்லை சண்டைக்காரன் காலில் விழுவதே மேல் என்று "அணுவாயுதத்தை நாமிருவரும் முதலில் பயன்படுத்துவதில்லை" என்று ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று பாகிஸ்தானை அழைத்தது.

ஆனால், பாகிஸ்தானோ ஒப்பந்தத்திற்கு மறுத்து அடுத்து மூளும் யுத்தம் சாதாரணமாக இருக்காது என்று சண்டித்தனம் செய்கின்றது.

பெருமளவு இராணுவமும் அணுகுண்டுகளும் ஒரு நாட்டை பெரிய வல்லரசு என்று இனம்காட்டிக்கொள்ளப் போவதில்லை. அரசியல் ஆதாயம் தேடுபவர்கள்தான் இந்தியா - பாகிஸ்தான் பிரச்சினையை தணிந்து போகவிடாது ஊதி ஊதி பெருநெருப்பாக்கிக் குளிர் காய்கின்றார்கள் என்று அரசியல் வட்டாரங்கள் முகத்தைச் சுழிக்கின்றன.

தற்போது பகைமையுணர்வு மக்கள் மத்தியிலும் நாளுக்கு நாள் வேருன்ற ஆரம்பித்துள்ளது. இளைய தலைமுறையினரிடம் இது மிக ஆழமாக கால் பதித்துள்ளது. ஒவ்வொரு நாளும் பகைமை ஆழமாக மக்கள் மனங்களில் இறங்குகின்றன.

இந்த வகையில்தான் அண்மையில் நடந்த உலகக் கிண்ணப் போட்டியில், "இந்தியா வெல்ல வேண்டும். ஏன் எனில் பாகிஸ்தான் நம் எதிரிகள்" என்று இரண்டாம் ஆண்டு சிறுமி பாடசாலை முதல்வரிடம் கூறியுள்ளமை வளரும் இளம் உள்ளங்களில் இப்படி பகை விதை தூவப்பட்டுள்ளதே நாளைய சமூகம் எப்படி இருக்குமோ தெரியவில்லை என்று கவலை படைகின்றார் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் உமர் அப்துல்லா.

அத்துடன், விளையாட்டை வினையாக்கி கோரக் காட்சியை ரசித்து பார்த்தவர்களும் உண்டு. குஜராத்தில் வகுப்புவாதக் கலவரம், பெங்களூரில் மதக் கலவரம், இன்னும் இன்னும் பல இடங்களில் மோதல்கள்.

இவ்வாறு, உலகக் கோப்பைக் கிண்ணப் போட்டி உருவாக்கிவிட்ட துன்பங்களோ அதிகம்.

தற்போது, இந்தியா தனது அயல் நாடுகளுடன் நட்புறவைப் பேணவே விரும்புவதால்தான், பாகிஸ்தான் அதிபரை ஆக்ராவில் பேச்சுக்கு அழைத்ததாகவும், அவர் மறுத்துவிட்டதாகவும், நட்புறவை விரும்பிய தால்தான் தாம் லாகூருக்குச் சென்று வந்ததாகவும் இந்தியப் பிரதமர் கொஞ்சம் இறங்கி வந்துள்ளார்.

அத்துடன் ஜம்மு-காஷ்மீரில் அமைதியை ஏற்படுத்தவும் அம் மாநிலத்தின் வளர்ச்சிக்கும், அங்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் மத்திய அரசு மாநில அரசுடன் ஒருங்கிணைந்து செயற்படவுள்ளதாகவும் பிரதமர் மேலும் நட்புறவின் பயணத்தை விளக்கியுள்ளார்.



முஷாரப்-வாஜ்பாய்

அமெரிக்காவின் இலக்குகளில் பாகிஸ்தானும் ஒன்று என ஊடகங்கள் வெளிப்படுவதனால்தானோ தெரியவில்லை. இந்தியா நட்புறவை நோக்கி ஓரடி வைத்தால் பாகிஸ்தான் இரண்டடி வைக்கத் தயாராக உள்ளதாகவும், எல்லை தாண்டிய பயங்கரவாதப் புராணத்தை இந்தியா கைவிட்டமை சந்தோஷமளிப்பதாகவும் பாகிஸ்தான் பிரதமர் 'ஜமாலி' வரவேற்றுள்ளார்.

இதனையடுத்து ஜம்மு-காஷ்மீரில் பல்வேறு குழுக்களுடன் பேச்சுக்கள் நடாத்த மத்திய அரசின் பிரதிநிதி "என்.என் மோரா" கடந்த 21ஆம் திகதி காஷ்மீருக்கு ஒருவார கால பயணமாகப் போயுள்ளார்.

அதேபோல் நேற்று பாகிஸ்தான் வெளியுறவு தொடர்பாளர் அஸிர் அமர்கான், இந்தியாவுடன் எவ்வித நிபந்தனைகளுமின்றி பேச்சுக்கு பாகிஸ்தான் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார்.

இதனிடையே மத்திய மந்திரி பிரதிநிதி மோராவுடன், கூரியத் மாநாட்டுக்கட்சி உட்பட பிரிவினைவாதக் கட்சிகளும் பேச்சுக்கள் நடாத்துவது பற்றி முடிவாகவில்லை என்று நேற்று அறிவித்துள்ளன.

அத்துடன், நேற்று ஜம்மு- காஷ்மீரில் நிலக்கண்ணி வெடி வெடித்து 05 பேர் பலியாகியுள்ளனர்.

எனவே, பேச்சுவார்த்தை, என்பது வாய்ச் சொல்லுடன் மட்டும் நின்றுவிடும் அபாயமும் உள்ளது. காஷ்மீர் தீவிரவாதிகளோ வாஜ்பாயை நம்பத் தயாராகவில்லை என்கின்றனர்.

இதனால், தீவிரவாதிகளுடன் நல்லுறவு ஏற்படாதவரை ஜம்மு-காஷ்மீர் பிரச்சினை தீர்ந்திடுமா என்பது சந்தேகமே...

இரு நாடுகளும் தமது சுய நலத்திற்காக தீவிரவாதிகளை ஊக்குவித்தார்கள், வளர்த்தெடுத்தார்கள். தற்போதோ தீவிரவாதம் பெரிய விருட்சமாக கிளை பரப்பி நிற்கும் வேளை, இரு நாடுகளும் சமாதானம் நோக்கி நகர முற்படுகையில், 'தன் கைவிரலே கண்ணைக் குத்திய கதையாக' இரு நாடுகளுக்கும் தீவிரவாதமே தடையாக உள்ளது. தீவிரவாதத்தை முடிவுக்கு கொண்டுவராத பட்சத்தில் இந்திய- பாகிஸ்தான் நட்புறவு என்பது கேள்விக்குறியாகவே இருக்கும் என்கின்றனர் அரசியல் அவதானிகள்.

இதனை மெய்ப்பிக்கும் வகையில், எல்லை கடந்த பயங்கரவாதத்தை நிறுத்தி, பயங்கரவாத முகாம்களை பாகிஸ்தான் கலைத்து விடுமானால் ஜம்மு-காஷ்மீர் உட்பட சகல விடயங்களும் பேசித்தீர்க்கும் சூழ்நிலை உருவாகும் என்று, சட்டசபையில் இன்று பிரதமர் வாஜ்பாய் பழைய பல்லவியைப் பாடியுள்ளார்..

எனவே, தற்போது கூறப்படும் சமாதானம் என்பது எந்தளவிற்குப் பொருந்தும்.... சரிந்திடுமா.... சரிவருமா.... என்பதுடன் எல்லைகளுக்கு அருகேயுள்ள மக்களின் வாழ்வில் விமோசனம் கிட்டுமா.... என்பதுதான் தற்போதைய எதிர்பார்ப்புக்கள்..

இன்றைய உலகில் இராணுவ பலம் மட்டுமே நாட்டின் தலைவிதியை நிர்ணயித்துவிடப் போவதில்லை என்பதை பாகிஸ்தான் தெரிந்து கொள்ளுமா... இந்தியாதான் புரிந்து கொள்ளுமா.....

இந்திய-பாகிஸ்தான் எல்லையில் இந்திய இராணுவம்





# நெல் கொள்வனவிற்கு களஞ்சிய வசதிகள் இல்லையென கூட்டுறவுச் சங்கங்கள் கைவிரிப்பு!

## சந்தைப்படுத்த முடியாது விவசாயிகள் தவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

மாவட்ட விவசாயிகளிடமிருந்து நெல்லினை கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கிளி. அரச அதிபர் தெரிவித்திருந்தும், களஞ்சியப்படுத்துவதற்கு இடவசதியில்லையென சில கூட்டுறவுச் சங்கங்கள் கைவிரித்துள்ளமையினால், நெற் செய்கையில் ஈடுபட்ட மாவட்ட விவசாயிகள் நெல்லினை சந்தைப்படுத்த முடியாது தவிக்கின்றனர்.

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் விவசாயிகளின் தற்போதைய திரிசங்கு நிலை குறித்து கல்மடுநகர் விவசாயக் குழுத் தலைவர் கிளி. அரச அதிபர் இ. இராசநாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதனை செவிமடுத்த கிளி. அரச அதிபர் கருத்து தெரிவிக்கையில்; விவசாயிகளிடமிருந்துநெல்லினைக் கொள்வனவு செய்வதற்கு 50 மில்லியன் ரூபாவினை கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தன்னால் வழங்கப்பட்டுள்ளதெனவும், விவசாயிகளுக்கு கைகொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு கூட்டுறவுச் சங்கங்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

எனவே, விவசாயிகளிடமிருந்து நெல்லினைக் கொள்வனவு செய்வதற்கு ப. நோ. கூ. சங்கங்கள் தயக்கமின்றி முன்வர வேண்டுமெனவும் சபையில் வேண்டிக் கொண்டார். (சோ)



மூதூர் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக திங்களன்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலை அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் ( இடமிருந்து) மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக், மூதூர் முஸ்லீம் சமூக தலைவர் மௌல்வி எம்.எம். கரீம், பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் மற்றும் திருமலை கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் அப்டெல் புர்கான் ஆகியோரை படத்தில் காண்க.

## புனரமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் இரத்தினபுரம் பகுதியில் முன்பள்ளி புனரமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. இப்பகுதியில் முன்பள்ளி இயங்கிவரும் கொட்டகை மோசமான நிலையில் உள்ளதால் அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டே மேற்படி முன்பள்ளி புனரமைக்கப்பட்டு வருகிறது. அத்துடன் இந்த முன்பள்ளியில் மலசல கூடம் ஒன்றை கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினர் புதிதாக அமைத்திருப்பதும்குறிப்பிடத்தக்கது. (லோ)

## 'இன்ரநெட்' உதவியில் பயிற்சி

இன்ரநெட் உதவியுடன் கட்டடக் கலை தொடர்பான பயிற்சி நெறிகளை யாழ். குடாநாட்டிற்கு வழங்குவதற்கு ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் முன் வந்துள்ளது.

சிஸ்கோ நிறுவனத்தின் உதவியுடன் இந்தப் பயிற்சி நெறிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தப் பயிற்சி வகுப்பில் கட்டடப்பட வரைவு, கட்டடம் அமைத்தல், கட்டடம் பேணுதல் என்பன தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும்.

ஜீலை மாத முற்பகுதியில் இந்தப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படும் என்றும், உலகளாவிய ரீதியில் பின்பற்றப்படும் கட்டடக்கலை தொடர்பான பல்வேறு விடயங்களையும் இன்ரநெட் மூலம் மாணவர்கள்அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும் என்று ஐ.நா. அபிவிருத்தித்திட்டஅதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை பயன்படுத்த வேண்டிய தருணம் வந்துவிட்டது!

## ஆலோசகர் அநுரா பண்டாரநாயக்க அறிவிப்பு

(கொழும்பு)

**"சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டிய தருணம் தற்போது ஏற்பட்டிருக்கின்றது. இதன் மூலம் வெகுவிரைவில் புதியதோர் அரசை சனாதிபதி அமைப்பார்." இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினரும், சனாதிபதியின் ஆலோசகருமான அநுரா பண்டாரநாயக்க தியத்தலாவை கலாசாலை மண்டபத்தில் நடைபெற்ற அப்புத்தளைத்-தேர்தல் தொகுதி சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் கூறியுள்ளார்.**

எமது சனாதிபதி இன்று மிகவும் சந்தோஷமாகவும், சுகதேகியாகவும் இருந்து வருகின்றார். மக்களின் அமோக ஆதரவு நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போகின்றது. எனது பெற்றோர், சனாதிபதியான எனது அக்கா ஆகியோர் சிறந்ததோர் அரசியல் கலாச் சாரத்தைப் பின்பற்றியுள்ளனர். எனது அக்காவும் அதனையே பின்பற்றுகின்றார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் புரிந்துணர்வு ஒன்றின் கீழ் ஒன்றிணைந்து அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

புலிகள் அமைப்பிடம் தனியானதொரு கடற்படையினரும் இருந்து வருகின்றனர். தனியான பொலிஸ் பிரிவும் இயங்குகின்றது. 17ஆயிரம் பாதுகாப்புப் படை வீரர்கள் அவர்களிடம் இருந்து வருகின்றனர். புதிய சிறுவர் பாதுகாப்புப் படை ஒன்றையும் அமைத்து வருகின்றனர். அண்மையில் இங் கிலாந்திலிருந்து 25 பெட்டிகளில் விமானப் படை உபகரணங்கள் வவுனியாக் காட்டுப் பகுதிக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

சுமார் 130 பேரைக் கொண்ட தற்கொலைப் படையைச் சேர்ந்தவர்கள் கொழும்பிலுள்ளனர். தற்போது புலிகள் தம்மை நன்கு பலப்படுத்திக் கொண்டுள்ளனர்.

ஆனால், குறுகிய காலத்திலேயே அரசு மக்களுடைய எதிர்ப்பை சம்பாதித்துக்கொண்டுள்ளது. மக்களின் பலத்த எதிர்பார்ப்பு இதுவரை நிறை வேற்றப்படவில்லை. மேலும், மேலும் மக்களுக்கு சுமையே ஏற்பட்டது. அரசைக் கொண்டு நடத்த முடியாமல் ஐக்கிய தேசிய முன்னணி தவிக் கின்றது. பாவனைப் பொருட்களின் விலை 200 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

எமது ஆட்சிக் காலத்தில் 400 ரூபாவுக்கு இருந்த பசளை, இன்று 1100 ரூபா வரை உயர்ந்து விட்டது. மின்சாரம், தொலைபேசி, நீர் ஆகியவற்றுக்கான கட் டணங்களும் அதிகரித்து விட்டன என்றார்.

## கிராம வலுவூட்டாளர்களுக்கு ஐந்து நாள் பயிற்சிப் பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

நியாப் 2003 திட்டத்தில் கிளி, முல்லை, மன்னார் மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பெற்ற கிராம வலுவூட்டாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை கடந்த திங்களன்று யாழ். திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் ஆரம்பமாகியது.

தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெறவுள்ள இப்பயிற்சிப் பட்டறையின் ஆரம்பநாள் நிகழ்வன்று மங்கல விளக்கினை யாழ். அரச அதிபர் பத்மநாதன், தமிழர் புனர்வாழ்வுக் கழக துணைப் பொறுப்பாளர் இனியவன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். பத்மநாதன் தலைமையில் பயிற்சி நெறிப்படுத்தல் இடம்பெற்றது.

இப்பயிற்சிப்பட்டறையில் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 62 வலுவூட்டாளர்கள் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கிளிநொச்சியில் மாவட்ட வைத்தியசாலை செப்டெம்பர் மாதம் முதல் இயங்கும்!

### -பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் தகவல்

(அலுவலக செய்தியாளர்)

ஜப்பான் நிறுவனத்தினருடனான ஒப்பந்தத்தின் மூலம் முன்னாள்கிளி. மாவட்ட வைத்தியசாலையில் 6 விடுதிகளும் 2 மண்டபங்களும் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இது குறித்து கிளி.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தியிடம் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்;

மேற்படி வைத்தியசாலையில் 6 விடுதிகளையும் 2 மண்டபங்களையும்அமைத்துத் தருவதற்கு யப்பான் நிறுவனம் முன்வந்துள்ளது. அத்துடன் வெளிநோயாளர்மண்டபத்திற்கு அரச நிதியிலிருந்து 5 மில்லியன் ரூபா கிளி. அரச அதிபரினால் வழங்கப்பட்டுள்ளதெனவும்,

மேலும் பெண்கள் விடுதி அமைப்பதற்கு போருட் நிறுவனத்திடம் 2 மில்லியனுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளதுடன் மேற்படி வைத்தியசாலையின் புனரமைப்பு வேலைகள் துரித கெதியில் முன்னெடுக்கப்பட்டு செப்டெம்பர் முதலாம் திகதி கிளி. மாவட்ட வைத்தியசாலை இங்கு இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென தெரிவித்தார். (சோ)

## களுவாஞ்சிக்குடிப் பகுதியில் ஒருவித வைரஸ் காய்ச்சல்!

### அதிகாரிகள் தரப்பில் மௌனம்

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள துறை நீலாவணைக் கிராமத்தில் ஒரு விதமான வைரஸ் காச்சல் வேகமாகப் பரவிவருவதால் இவ்வூரில் உள்ள நூற்றுக்கணக்கான மக்கள் நோய் வாய்பட்டுள்ளனர்.

இக் காய்ச்சலுக்கான காரணங்களைக் கண்டறிந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய வைத்திய அதிகாரிகள் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மௌனம் சாதித்து வருவதாகப் பொதுமக்கள் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

## தியாக தீபம் திலீபன் மருத்துவசேவையால் மன்னாரில் 1வருடத்தில் 14,348 பேர் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையின் மன்னார் நிலையம் தனது ஒருவருட சேவையை எதிர்வரும் 25.ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூர்த்தி செய்கின்றது.

மேற்படி மருத்துவமனை கறுக்காய்குளம், பகுதி மக்களின் நன்மை கருதியும் அடிப்படை சுகாதார நிலையைக் கருத்தில் கொண்டும் அமைக்கப்பட்டதாகும்.

இந்த மருத்துவமனையில் கடந்த வருடம் சித்திரை மாதம் 702 நோயாளர்களும், வைகாசி மாதம் 1249 நோயாளர்களும், ஆனி மாதம் 1276 நோயாளர்களும், ஆடி மாதம் 765 நோயாளர்களும், ஆவணி மாதம் 1145 நோயாளர்களும், புரட்டாதி மாதம் 1004 நோயாளர்களும், ஐப்பசி மாதம் 953 நோயாளர்களும், கார்த்திகை மாதம் 1211 நோயாளர்களும், மார்கழி மாதம் 1313 நோயாளர்களும், தைமாதம் 1258 நோயாளர்களும், மாசி மாதம் 1239 நோயாளர்களும், பங்குனி மாதம் 998 நோயாளர்களும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மன்னார் கறுக்காய்குளத்தில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் இதுவரை மொத்தமாக 14348 நோயாளர்களுக்கு தனது ஒருவருட பூர்த்தியில் சேவை செய்துள்ளது. அத்துடன் அயல் கிராமங்களில் சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளது. (லோ)

# சர்வதேச நிதி தொடர்பான ஆலோசனை வழங்கும் உரிமை புலிகளுக்கே உண்டு

## மலையக மக்கள் முன்னணித்தலைவர்சந்திரசேகரன்

**போர்நிறுத்த உடன்படிக்கை காரணமாகக் கிடைக்கும் சர்வதேச உதவிகளை வடக்கு கிழக்குப் பகுதிகளில் எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி கருத்தும், ஆலோசனையும் தெரிவிக்கும் உரிமை முற்றுமுழுதாக விடுதலைப் புலிகளுக்கும், அம்மாகாண அமைப்புகளுக்குமே உண்டு என மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பாக அமெரிக் காவில் நடைபெற்ற முன்னோடி மாநாட்டில் விடுதலைப்புலிகள் புறக்கணிக்கப்பட்டமை பாரதூரமான அவமதிப்பு என கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ள கருத்து ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

போர்நிறுத்தத்தைப் பயன்படுத்தி பெறப்படும் நிதி உதவிள் வடக்குக் கிழக்கிற்கு வெளியே பெருமளவு பயன்படுத்தப்படுமானால் இன ஒடுக்கல் அரசியலுக்கு இதுவும் ஓர் உதாரணமாகிவிடும். அத்துடன் கிடைக்கும் வெளிநாட்டு நிதி உதவிகள் எந்தெந்தப் பிரதேசங் களுக்கு எப்படிப் பயன்படுத்துவது என்ற தீர்மானங்கள் புலிகளின் ஆலோசனையின்றி மேற்கொள்ளப்படுமானால் போர்நிறுத்தம்என்றசூழ் நிலை அர்த்த மற்றதுஎன அவர் மேலும்கூறியுள்ளார்.

# சிறுபோக நெற்செய்கை விதிமுறைகளை பின்பற்ற விவசாயிகளுக்கு வேண்டுகை!

(அலுவக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் விதைப்பிற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளைக் கடைப்பிடிக்கும் வண்ணம் கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் வேண்டியுள்ளார்.சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் சிறந்த விளைச்சலைப்பெறும் வகையிலும், குளநீரினை வீண் விரையமாக்குவதனைத் தடுக்கும் வகையிலும் எடுக்கப்பட்டுள்ள இந்நடவடிக் கையினை சிறுபோக விவசாயிகள் பின்பற்றி நடக்கும் வண்ணம் வேண்டியுள்ளதுடன் தீர்மானிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட திட்ட நடவடிக்கையினை மீறும் விவசாயிகள் மற்றும் விவசாயத் திட்டக் குழுவினருக்கும் தண்டம் அறவிடப்படுவதுடன் திட்ட அளவிலான மீறி விதைக்கப்பட்டுள்ள நெற்பயிர்கள் உடன் அழிக்கப்படுமெனவும் நேற்று முன்தினம் நடைபெற்ற கிளி. மாவட்ட விவசாயக் கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாய, நீர்ப்பாசன, திணைக்கள மற்றும் விவசாயத் திட்டக்குழு உறுப்பினர் மத்தியில் தெரி வித்தார். (சோ)

# மீள் குடியேறிய மக்களிற்கு அடிப்படை வசதிகள் இல்லை

(ஒட்டுசுட்டான்)

இராணுவ நடவடிக்கை மூலம் இடம் பெயர்ந்து மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறிய மக்கள் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் உள்ளனர்.

17ஆம் கட்டை மாமடு, பழம்பாசி, தன்டுவான் இத்திமடு, காளிக்காடு ஆகிய இடங்களில் உள்ள மக்களுக்கு போக்குவரத்து வசதி இல்லை வைத்திய வசதியை நெடுங்கேணி, திலீபன் மருத்துவ மனைமூலமே பெற்று வருகின்றனர் என்றும் குறிப்பிடத்தக்கது. (05)

---

## தேடுகிறார்கள்

**யாழ். தாவடியைச் சேர்ந்த நடராசா செல்வக்குமார் 1995 இடப்பெயர்வின் போது காணாமல் போனவர். மூளை சுகயீனமானவர் இவரை வைத்திருப்பவர்கள், கண்டவர்கள் உடன் அறிவிக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். கடிதம் மூலமும் அறிவிக்கலாம்.**

தொடர்பு:- T.P. 3189

**த.நடராசா,**
**தாவடி, பிள்ளையார் கோயிலடி.** (3158)

தகவல்
ந. தவக்குமார்.

---

## கிளி - மாவட்ட தொழில் நுட்பக் கல்லூரி

## விண்ணப்பம் கோரல்

01. வீட்டு மின் இணைப்புக்கான தொழிற் சான்றிதழ் கற்கை
02. வானொலி (ரேடியோ), தொலைக்காட்சி (ரீ.வி) திருத்துதல் பயிற்சி நெறி.
03. டீசல் இயந்திரங்கள் திருத்துதல் பயிற்சி நெறி

ஆகிய கற்கை நெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமை :- க.பொ.த.(சா/த)
வயது :- 18 - 40 வரை

தகைமையுடையவர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை 30.04.2003 க்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு:-** இப்பயிற்சி நெறிகள் யாவும் கிளிநொச்சி நகரிலேயே நடைபெறும்.

**அதிபர்,**
**தொழில் நுட்பக்கல்லூரி,**
**கிளிநொச்சி.**

வன்னேரிக்குளம் வீதி,
ஆனைவிழுந்தான். (சி-8089)

---

## 45 ஆம் நாள் நினைவில் (24. 04. 2003)

## துயர் பகிர்வோம்

### நஞ்சன்

முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிமனையில் பணியாற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு. வே. ஜெயம் சபாபதி அவர்களின் உடன் பிறப்பு

**கப்பல் கப்டன் சிலம்பரசன் / நஞ்சன்**

**(வேலாயுதபிள்ளை ஜெயரஞ்சன்)**

**யாழ்/ ஆழியவளை**

**10.03.2003** அன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்டமையை அறிந்தோம். அன்னாரின் பிரிவில் துயருறும் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம்.

**பணியாளர்,**
**நலன்புரிச்சங்கம்,**
**வலயக்கல்விப்பணிமனை,**
**முல்லைத்தீவு.**

(3096)

---

# தையல் பயிற்சி நிறைவில் பயனாளிகளுக்கு சான்றிதழ்!

(அலுவலக செய்தியாளர்)

போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன், வவுனியா மாவட்டப் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்றுவந்த தையல் பயிற்சிநெறி நிறைவு விழா மதியாமடுப் பாடசாலையில் நடைபெற்றது.

வவுனியா மாவட்டப் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் செல்வி இலக்கணா தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை நயினாமடு கிராம சேவகர் நவரட்ணம், திலீபன் மருத்துவமனை தில்லை ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை புளியங்குளம் பிரதேச பொறுப்பாளர் இசைச் செல்வரும் நிறுவனக் கொடியினை பெண்கள்அபிவிருத்திப்புனர் வாழ்வு நிறுவனநிறைவேற்றுப் பணிப்பாளர் கே.சுதர்சினி ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து கண்காட்சி மண்டபத்தினை வவுனியா வடக்கு போரூட் நிறுவன இணைப்பாளர் லோகநாதன் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். பயிற்சியினை முடித்துக்கொண்ட 25 பயனாளிகளுக்கு சான்றிழ்கள் வழங்கப் பட்டன. (சோ)

# ஆங்கிலப் பாட ஆசிரியர்களை நியமிக்க பெற்றோர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை தொடர்ந்து நிலவி வருவது குறித்து இப்பகுதிப் பெற்றோர் மிகவும் அதிருப்தியும், கவலையும் கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக இங்குள்ள பெரும்பாலான பாசாலைகளில் பயிலுகின்ற மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தைப் படிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

அதேவேளை, கோப்பாய் கல்விக்கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஆங்கிலப்பாடத்தை போதிக்க ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி பெற்றோர் கல்வி அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

# மாதர் சங்கங்களின் நடப்பு நடவழக்கை குறித்து ஆராய்வு

(ஒட்டு சுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள மாதர்சங்கங்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

கடந்த திங்களன்று மாலை 3மணியளவில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் ஒட்டுசுட்டான் பிரதேச பெண்கள் மேம்பாட்டு பொறுப்பாளர் வான்மதி தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

கிராமிய மாதர்சங்கங்கள் தெரிவு செய்வது பற்றியும் எதிர்காலத்தில் செயற்படுத்த வேண்டிய தேவைகள் பற்றியும் ஆராயப்பட்டது. (05)

# மன்னாரிலிருந்து சென்ற நால்வர் தமிழக காவல்துறையால் கைது!

(சென்னை)

இலங்கையிலிருந்து நான்கு அகதிகள் நேற்றுமுன்தினம் இராமேஸ் வரம் சென்றடைந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இவர்கள் மருத்துவ சிகிச்சை பெறும் நோக்கோடே தமிழகம் வந்ததாக தமிழகக்காவல்துறையினரிடம் தெரிவித்துள்ளனர்.

மோகன், ராஜ்குமார், வனிதா மற்றும் பிலோமினா ஆகியோரே தமிழகம் சென்றவர்களாவர். இவர் கள் அனைவரும் மண்டபம் அகதி முகாமில் தங்க வைக்கப் பட்டுள் ளனர். படகோட்டியான சகாயநாதனை காவல்துறையினர் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

இதேவேளை, இலங்கைக்கு திரும்புவதற்காக தமிழகம் இராமேஸ்வரத்தில் கடற்கரையிலுள்ள காட்டிற்குள் வைத்து காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட 20 ஈழத்தமிழ் அகதிகளும் மீண்டும் மண்டபம் அகதிமுகாமிற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

## கலந்துரையாடல்

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம் பிரதேசத்தில் மேநாள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

கடந்த திங்களன்று மாலை 3 மணியளவில் மாங்குளம் பிரதேசப் பொறுப்பாளர் இராகுலன் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் பொது அமைப்புக்கள், தேசிய எழுச் சிப்பேரவை உறுப்பினர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (05)

## நிவாரணம் வழங்கப் பணிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிமாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கான பெப்ரவரி மாத உலர் உணவு நிவாரணத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் வண்ணம் கிளி அரச அதிபர் தி.இராசநாயகம் பிரதேசசெயலர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனடிப்படையில் பிரதேசச் செயலர்கள் கிராமசேவை அலுவலர்களை பெப்ரவரி மாத உலர் உணவு வழங்குவதற்கு உடன் நடவடிக்கையினை மேற்கொள்ளும் வண்ணம் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)

## அனுமதியைப் பெற்று போட்டி நடத்துக

வன்னி மாவட்டத்திற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்கள், நிறுவனங்கள், சங்கங்கள் யாவும் 01.05.2003 தொடக்கம் போட்டி நிகழ்வுகள் நடாத்துவதற்கு வன்னி மாவட்ட விளையாட்டுத்துறையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறும், தொடர்புகளுக்கு வன்னி மாவட்ட விளையாட்டுத்துறை கிளிநொச்சி செயலகத்துடனும் தொடர்பு கொள்ளும்வண்ணம் விளையாட்டுத் துறையினர் வேண்டியுள்ளனர்(சோ)

---

## ஏல விற்பனை

பொருண்மிய மதியுரையகத்தின் பாவனைக்கு உட்படுத்தப்பட்ட கீழ்வரும் பொருட்கள் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது.

**01. அலுவலக தளபாடங்கள்.**

**02. மின்னியற்கருவிகள்.**

**03. உணவக உபகரணங்கள.**

இவற்றினை 25.04.2003 ஆம் திகதி முத்து ஐயன்கட்டுப் பொருண்மிய மதியுரையக செயலகத்தில் (ரெக்) காலை 10 மணிக்கு இடம் பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

(2848)

---

## கிளி-மாவட்ட தொழில்நுட்பக் கல்லூரி

## பகுதி நேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பம் கோரல் (தற்காலிகம்)

பின்வரும் பாடங்களை கற்பிப்பதற்கு தகைமையுடைய, சம்பந்தப்பட்ட துறைசார்ந்த பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

1. கணக்காய்வு
2. புள்ளிவிபரவியல்
3. வியாபாரத் தொடர்பாடல்
4. கணக்கியல்
5. முகாமைத்துவம்
6. கணினி

தொழில்நுட்பத் துறைசார்ந்த போதனாசிரியர்கள்:-

1. வீட்டு மின்னிணைப்பு
2. ரீ.வி திருத்துதல்
3. ரேடியோ திருத்துதல்
4. டீசல் இயந்திரம்
5. மேசன் பயிற்சி நெறி

மேற்படிப் பாடநெறி, பயிற்சி நெறிக்குரிய தகுதியுடையோர், உரிய துறை சார்ந்த ஆவணங்களுடன், எதிர்வரும் 28.04.2003 ஆம் திகதி, திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு, கிளி / வலயக்கல்விப் பணிமனைக்கு அருகிலுள்ள கிளி/தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் சமுகந்தரவும்.

**அதிபர்,**
**தொழில்நுட்பக்கல்லூரி,**
**ஆனைவிழுந்தான்.**

வன்னேரிக்குளம் வீதி,
கிளிநொச்சி. (சி-8088)

## சிந்தனைக்கு

சுதந்திரம் இல்லாமல் மனித வாழ்வில் அர்த்தமே இல்லை.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 24-04-2003

## அரசாங்கத்தின் கையில்

"பேச்சுவார்த்தையை விடுதலைப்புலிகள் இடை நிறுத்தியமை அமைதி வழி முறிந்துவிட்டது என்று பொருளல்ல" என்ற அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அவர்களின் கூற்றுக்கள் சரியானவையே. அதாவது, விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் இருந்து முற்றாக விலகிக் கொள்வதாகவோ அன்றி யுத்த நிறுத்த உடன்பாட்டை முறித்துக் கொள்வதாகவோ அறிவிக்கவில்லை.

தாய்லாந்தில் நடைபெறவிருந்த ஏழாவது சுற்றுப் பேச்சுக்களிலும், ஜப்பானில் நடைபெறவுள்ள சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலும் பங்குபற்றப் போவதில்லை என்று மட்டுமே அறிவிப்புச் செய்துள்ளது. அத்தோடு, பேச்சுவார்த்தையில் பங்கேற்பதை இடை நிறுத்தியதற்கான காரணங்களையும் விடுதலைப்புலிகள் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால், சிறிலங்காவிலுள்ள சமாதானத்திற்கும், அரசியல் தீர்விற்கும் விரோதமான சக்திகள் - விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டு வருவதாகவும், யுத்தத்திற்குத் தயாராகிவிட்டதாகவும் இனவாதப் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளன.

குறிப்பாகச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்புச் சபையை இரு தடவைகள் கூட்டிப்பேசியுள்ளார். அத்தோடு, முப்படைகளையும் 1995ஆம் ஆண்டிற்கு முந்திய நிலையில் இருந்த வாறான பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்குமாறு பணித்துள்ளார். அத்தோடு, வீதித் தடைகள், சோதனைகள், ரோந்துக்கள் என்பனவற்றையும் அதிகரிக்குமாறு கோரியுள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவோ விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் இருந்து விலகியுள்ளதை விவாதிப்பதற்குப் பாராளுமன்றத்தை உடன்கூட்ட வேண்டுமெனக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். இதேவேளை, ஜே.வி.பி.யோ சனாதிபதி சந்திரிகா அரசியல் யாப்பு அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் எனக் கோரியுள்ளது. இக்கோரிக்கையானது ஜே.வி.பி. எதைக் கோருகின்றது என்பதை வெளிப்படுத்தாது விட்டாலும், ஐ.தே.முன்னணி அரசாங்கத்தைக் கலைப்பதற்கான சந்தர்ப்பம் இதுவென்று கூறுவதாகவே அர்த்தம் கொள்ளத் தக்கதாக உள்ளது.

அதாவது, புலிகள் பேச்சுவார்த்தையை இடைநிறுத்தியதும் ஒவ்வொரு கட்சியும், அமைப்புக்களும் தத்தமது நோக்கின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இறங்கியுள்ளன. இதில், இனவாதிகளும் யுத்தத்தின் ஆதரவாளர்களும் தமது நடவடிக்கைகளை மீண்டும் ஒரு யுத்தத்தைப் புலிகள் ஆரம்பித்து விட்டதுபோல் மேற்கொள்பவர்களாக உள்ளனர்.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளின் கடிதத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் குறித்துத் தீவிர கவனம் செலுத்துவதாகப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கு எழுதியுள்ள கடிதமானது ரணில் விக்கிரமசிங்க புலிகளின் கடிதத்தினை நன்கு பரிசீலித்ததாகவே எண்ணவைக்கின்றது. ஆகையினால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புலிகளின் கடிதம் தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்த அடுத்த கட்டத்தைத் தீர்மானிப்பதாக இருக்கும் என்றே துணிந்து கூறலாம். அதாவது, புலிகளின் குற்றச்சாட்டுக்கள் குறித்து பிரதமர் ரணில் ஆக்கபூர்வமான பதில் அளிக்கும் பட்சத்தில் அரசியல் தீர்வின் எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும்.

இவை ஒருபுறம் இருக்க, யாழ். நகரப் பகுதியில் புதியதொரு விகாரையை அமைக்கும் முயற்சியில் இராணுவத்தினரின் உதவியுடன் பிக்குகள் இறங்கியுள்ளமையானது, சமாதான முயற்சிகளில்கூட பாதகங்களை விளைவிக்கும் அம்சமாகவே இருக்கும். அதாவது, மக்களின் உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு - மோதல்களை உருவாக்கிவிட்டு சமாதானம் குறித்துப் பேசுவதில் அர்த்தம் இல்லை.

பேரினவாத சக்திகள் எப்பொழுதும் இன வன்முறையையும், பதற்றத்தையும் தோற்றுவிக்கும் வகையில் நடந்துகொள்வது ஒன்றும் ஆச்சரியத்திற்குரிய தொன்றல்ல. ஆனால், அவர்களின் அத்தகைய நடவடிக்கைகளை அரசாங்கம் பார்த்துக் கொண்டிருப்பது அன்றி மறைமுகமாகவேனும் அரசின் வளங்கள், அதிகாரங்கள் என்பன பயன்படுத்தப்படுவதை அனுமதிப்பதென்பது அரசாங்கமும் அதற்கு ஆதரவாகச் செயற்படுகின்றது என்றே அர்த்தப்படுவதாகும். ஆகையினால், யாழ். இல் விகாரை அமைப்பது போன்ற பேரினவாத சக்திகளின் நடவடிக்கைகளை அரசாங்கம் தடுத்து நிறுத்தாதுவிடில், அரசாங்கமும் அதில் பங்கேற்பதாகவே கருதப்படும்.

ஆகையினால், விடுதலைப்புலிகளை சமாதானப் பேச்சுவார்த்தையில் தொடர்ந்து ஈடுபடவைப்பதென்பது அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது. சமாதானத்திற்கு விரோதமான சக்திகள் போர் பற்றிக் கூச்சல் இடினும் அரசாங்கம் எடுக்கும் தீர்மானமே அடுத்த கட்டம் குறித்து தீர்மானிக்க வல்லதாகும். ஆகையினால், புலிகளின் குற்றச்சாட்டுகளுக்கு அரசாங்கம் தீர்வுகாண முற்படாதுவிடின், எதிர்த்தரப்பினர் போல் இவர்களும் யுத்தத்திற்குத் தயாராகி வருவதாகவே கொள்ளத் தக்கதாய் இருக்கும்.

# சிறிலங்காவின் பொருளாதார வளர்ச்சி துரிதமடையும் சாத்தியம் காணப்படுகிறது

## மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை

(கொழும்பு)

உலகின் நீண்ட கால உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அதன் பின்னர் அபிவிருத்தி அடைந்த நாடுகளை கருத்திற்கொள்ளும் போது சிறிலங்காவின் பொருளாதாரம் துரித வளர்ச்சியடையும் சாத்தியமிருப்பதாக சிறிலங்கா மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சிறிலங்காவின் பொருளாதாரம் 04 தொடக்கம் 05 வீதத்தினால் வளர்ச்சியடையும் சாத்தியம் உள்ளதாகத் தெரியவருகின்றது. யுத்தத்திற்குப் பின்னர் சர்வதேச உதவி வழங்கும் அமைப்புக்களிடமிருந்து உதவியாகப் பெற்றுக்கொண்ட நிதியைத் திரும்பச் செலுத்தக்கூடியதாக இருக்கும் என மத்திய வங்கியின் ஆளுநர் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சிறிலங்காவின் பொருளாதாரக் கொள்கை மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பான சர்வதேச சமூகத்திற்கு உள்ள தெளிவானது, இந்த நாட்டிற்கு கிடைக்கும் உதவியின் அளவு அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உயர் கல்வித்துறையில் சீர்திருத்தம் ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

உயர் கல்வித்துறையில் சீர்திருத்தம் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என இரண்டாம் நிலைக் கல்வித் தொழிற்பயிற்சி அமைச்சர் கூறியுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் அமைந்துள்ள உயர் தொழில்நுட்பக் கல்விக்கான இலங்கை நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஒருநாள் கருத்தரங்கில் உரையாற்றிய அமைச்சர் இலவசக் கல்வியை மேலும் பயனுள்ளதாக விருத்தி செய்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறியுள்ளார். நாட்டின் கல்வியின் தரம் குறைந்து வருவதற்கு அரசாங்க நிறுவனங்களிலுள்ள நிர்வாகப் பிரிவுகளில் காணப்படும் குறைபாடுகளே காரணம் என அவர் கூறியுள்ளார்.

# திறைசேரியிடம் அனுமதி கோரல்

(கொழும்பு)

ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க 1250 பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்க கல்வி, மனிதவள அபிவிருத்திக் கலாசார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கணிதம், விஞ்ஞானம்,ஆங்கிலம், அழகியற்கலை ஆகிய பாடங்களுக்காக இந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கான அனுமதியை அமைச்சு திறைசேரியிடம் கோரியுள்ளது. இந்த அனுமதி கிடைத்ததும் உடனடியாக ஆசிரிய நியமனம் இடம்பெறுமென அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

# பாலியல் வல்லுறவில் ஈடுபட்ட இலங்கையருக்கு 8 வருட சிறை!

பிரிட்டனைச் சேர்ந்த பெண்ணை பாலியல் வல்லுறவு புரிந்த இலங்கையர் ஒருவரை இரண்டு வருடங்களின் பின்னர் பிரிட்டிஷ் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த இலங்கை நபருக்கு (சிவேந்திரன்,36 வயது) பிரிட்டிஷ் நீதிமன்றம் 08 வருட சிறைத்தண்டனையும், சிறை தண்டனை முடிந்த பின்பு இலங்கைக்கு நாடு கடத்துமாறும் உத்தரவிட்டுள்ளது.

பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் அகதி அந்தஸ்து கோரியிருந்த இந்நபருக்கு, நியூகவுத் கேட் பகுதியில் வீடு ஒன்றை அரசு வழங்கியிருந்த வேளையே இந்நபரும், அவருடைய நண்பரும் இத்தகைய குற்றத்தைப் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவருடைய நண்பரை பிரிட்டிஷ் பொலிஸ் தேடி வருகின்றது.

# தமிழரை பகடைக் காயாக்கி அரசியல் நடத்த மாட்டேன்

## - அமைச்சர் ஜெயலத் கூறுகிறார்

தமிழ் மக்களைப் பகடைக் காய்களாக வைத்து அரசியல் நடத்த நான் விரும்பவில்லை என மீள் குடியமர்வுப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் யாழ்ப்பாண செயலகத்தில் இடம்பெற்றபோது அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

யுத்தத்தினால் உடைந்து போயுள்ள உள்ளங்களுடன் வாழும் தமிழ் மக்களுக்கு இயன்றவரை உதவி செய்து அவர்களது மனங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்தவே நான் சேவையாற்றி வருகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னர் தான் எதிர்க்கட்சியில் இருந்தபோதும் இதனையே செய்தார் எனக் கூறியுள்ளார். இவ் வைபவத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பத்மநாதன், பாராளுமன்ற உறுப்பினர்களான சேனாதிராஜா, சிவாஜிலிங்கம் ஆகியோர் உட்பட திணைக்களத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

# இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் உறவை புதுப்பிக்க நடவடிக்கை

இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் உறவைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இரு நாடுகளின் கிரிக்கெட் சபைத் தலைவர்கள் பங்கேற்கும் துபாயில் நடை பெறும் கூட்டமொன்று இதற்கான வாய்ப்பை வழங்க வுள்ளது.

கார்க்கில் சண்டைக்கு பின்னர் பாகிஸ்தான் அணியுடனான கிரிக்கெட் உறவை இந்தியா துண்டித்தது. சுமார் மூன்று ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் இந்திய அணி உலகக்கிண்ண கிரிக்கெட்டில் பாகிஸ்தானை எதிர்த்து மோதியமை தெரிந்ததே.

அடுத்த மாதம் 3ஆம், 4ஆம் திகதிகளில் துபாயில் இடம்பெறவுள்ள கூட்டமொன்றில் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் டால்மியா மற்றும் பாகிஸ்தான் நிர்வாகி தாகிர்ஜியா ஆகியோர் கிரிக்கெட் உறவுகள் குறித்து விவாதிக்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

# சிறிலங்காவைத் தோற்கடிப்பது சிரமம்

## நியூசிலாந்து அணித் தலைவர் ஸ்டீபன் பிளேமிங்




சிறிலங்கா அணியை அவர்களது மண்ணில் தோற்கடிப்பது சவாலாகும் என நியூசிலாந்து அணியின் தலைவரான ஸ்டீபன் பிளேமிங் தெரிவித்துள்ளார்.

தங்களது அணி பல மாதங்களாக டெஸ்ட் போட்டிகளில் விளையாடாமையினால் , இத் தொடர் கடினமானதாக இருக்கும் என அவர் கூறியுள்ளார். தங்களது அணி வெற்றி பெற வேண்டுமாயின் ஆகக் குறைந்தது 500 ஓட்டங்களையாவது பெறவேண்டுமென அவர் கூறியுள்ளார்.

இளம்வீரரான சேன் போன் மற்றும் டானியல் விக்டோரி ஆகியோர் இத்தொடரில் முழுத்திறமையுடன் விளையாடினால் தங்களுக்கு டெஸ்ட்போட்டிகளில் வெற்றி பெற முடியும் என அவர் கூறியுள்ளார்.

இரண்டு நாடுகளுக்குமிடையிலான டெஸ்ட் தொடர் நாளை 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் அறிவிப்புக் குறித்த நிலைப்பாட்டை

# அரசு மக்களுக்கு உடன் அறிவிக்க வேண்டும்

## - எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ச

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து தற்காலிகமாக விலகியுள்ளதையடுத்து ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டை உடனடியாக மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும் என்று சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச கேட்டுக்கொண்டுள்ளார்.

எதிர்க்கட்சிகள் கூட்டாக நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தற்போதைய நிலையில் அரசாங்கம் மௌனம் சாதிப்பது ஆபத்தானது. அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து மக்களோ அல்லது எதிர்க்கட்சிகளோ எதனையும் அறிந்து கொள்ள முடியாத நிலைமை காணப்படுகிறது.

## 'வரதன் குழு' பொறுப்பாளரை கைது செய்யுமாறு உத்தரவு

(மட்டக்களப்பு)

சித்திரை புதுவருடத்தினத்தன்று ஆரையம்பதி காளிகோவில் வீதியில் ஏற்பட்ட கிரனைட்வீச்சு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் காரணமாக பலியானவர்கள் தொடர்பாக அப்பகுதியில் படையினருடன் இணைந்து செயற்படும் வரதன் குழுவின் பொறுப்பாளர் திலக் மற்றும் சுரேந்திரன் ஆகியோரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர் படுத்துமாறு மட்டக்களப்பு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மரண விசாரணையின் போது அளிக்கப்பட்ட சாட்சியங்களின் பிரகாரமே இருவரையும் கைது செய்யும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திலிருந்து கடந்த 2002 டிசெம்பரில் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றி குறிப்பிடத்தக்க பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு

உ.பிரசாத்-7ஏ,பி,சி , யோ.துஸ்யந்தன்- 6ஏ,3பி, நா.பிரசாந்தன்- 6ஏ,பி,2சி, த.சுகந்தினி- 5ஏ,பி,3சி, ப.இளங்கோ- 4ஏ,3பி,சி,எஸ் கோ.கீர்த்திகா- 4ஏ,2பி,2சி,2எஸ்

## - புளியம் பொக்கணையில் -

# மணல் ஏற்றுவதினால் மக்கள் கடும் விசனம்

(வவுனியா செய்தியாளர்)

கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள புளியம்பொக்கணையில் மணல் ஏற்றுவது தொடர்பாக மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கல்வெட்டித்திடலுக்கும் பிரமந்தனாற்றிற்கும் இடையே உள்ள வண்ணாத்தி ஆற்றில் இரவு வேளைகளில் பாரஊர்திகளில் மணல் ஏற்றப்படுகின்றது. மணல் ஏற்ற அனுமதிக்கப்படாத இப்பகுதியில் மணல் ஏற்றுவது தொடர்பாக கல்வெட்டித்திடல் மக்கள் பல தடவை கரைச்சிப் பிரதேச சபையிடம் முறையிட்டும் இதுவரை பலன் ஏதும் கிடைக்கவில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கல்வெட்டித்திடல் கிராம அபிவிருத்திச் சங்கம் இது தொடர்பாக கரைச்சிப்பிரதேச சபை நடவடிக்கை எடுக்கத் தவறினால் தாம் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தீர்மானித்துள்ளது. (10)

## கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளி. அக்கராயன் 8ம் கட்டை பாலன்குளம் சிறுபோக நீர் விநியோகக் கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி கரைச்சி பிரதேசச் செயலர் பொன். நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாலன்குள பொது மண்டபத்தில் அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ள இச்சிறுபோக நீர் விநியோகக் கூட்டத்திற்கு இக்குளத்தின் கீழ் நெற்செய்கையில் ஈடுபடவுள்ளவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கரைச்சிப் பிரதேசச் செயலர் வேண்டியுள்ளார். (சோ)

## சுகாதார ஊழியர்கள் அரசிற்கெதிராக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சுகாதார சேவை ஊழியர் சங்கங்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அகில இலங்கை சுகாதார சேவைச் சங்கம், சுகாதார சேவைகள் சங்கம், இலங்கை சுதந்திர பொதுச் சேவை சங்கம், அகில இலங்கை சுதந்திர ஊழியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கனிஷ்ட ஊழியர்களின் சம்பளங்களை அதிகரித்தல், சிற்றூழியர்களுக்கான பயிற்சிகளை ஆரம்பித்தல், மற்றும் சீருடைக்கான கொடுப்பனவை ஏழாயிரம் ரூபாவரை அதிகரித்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் முன்வைத்தனர்.

## 1 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான சீருடை முத்திரைகள் வந்தன!

(அலுவலக செய்தியாளர்)

கிளி. வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் 1 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான சீருடை முத்திரைகள் பிரதேச செயலகங்களுக்கு கிடைக்கப்பெற்று கிராம சேவை அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

மேற்படி ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்கள் தங்கள் சீருடை முத்திரைகளை வதியும் அந்தந்தப் பிரிவு கிராம சேவை அலுவலர் களிடம் பெற்றுக்கொள்ளுமாறு கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் வேண்டியுள்ளார். (சோ)

## - பேருந்துடன் மோதிய பின் -

# தப்பியோடிய வாகனத்தை காவல் துறை மடக்கியது!

(அலுவலக செய்தியாளர்)

ஆனையிறவுப் பகுதியில் பயணிகள் பேருந்து ஒன்றுடன் நேற்று குளிர்சாதனப் பெட்டி பொருத்திய எல்வ் வாகனம் ஒன்று மோதிவிட்டு தப்பிச் செல்ல முற்பட்டபோது காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

மேற்படி வாகனம் பயணிகள் பேருந்துடன் மோதிவிட்டுத் தப்பிச் சென்றபோது புளியங்குளம் பகுதியில் வைத்து தடுத்து நிறுத்தப்பட்டது. இதனை அடுத்து இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை, மற்றொரு வாகன விபத்து கிளிநொச்சி சந்தையின் பின் வீதியில் நிகழ்ந்துள்ளது. உழவு இயந்திரம் ஒன்று துவிச்சக்கரவண்டியுடன் மோதியுள்ளது. இதில் பயணம் செய்தவர் மயிரிழையில் தப்பியுள்ளார். இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு இன்று கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளது. (பா)

## - தர உள்ளீடு சம்பந்தமாக -

# முல்லை வலய பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேட கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு உட்பட்ட சகல பாடசாலை அதிபர் களுக்குமான தர உள்ளீடு சம்பந்தமான விசேட கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனை கல்வி வளநிலையத்தில் நடைபெறவுள்ளது.

தர உள்ளீடுகளுக்கான மாகாண நிதியில் இருந்து வழங்கப்பட்ட நுகர் பொருட்களுக்கும் பராமரிப்பு மற்றும் திருத்தங்களுக்கான கட்டுநிதி பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளது.

தர உள்ளீடுகளுக்கான குழுக்களின் விபரங்களையும் சென்ற வருடம் தர உள்ளீட்டு நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் விபரங்களை இதுவரையும் சமர்ப்பிக்காதவர்களையும் அன்றைய தினம் கொண்டு வரும்படியும் உயர்தரப் பரீட்சை கடமையில் ஈடுபடும் அதிபர்களுக்காக பாடசாலைகளின் பிரதி அதிபர்களையோ அல்லது சிரேஷ்ட ஆசிரியர்களையோ அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

## இலவச பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ சுகாதார சேவையினரின் அனுசரணையுடன் கொழும்பு "யூனியசேம்ப" நிறுவனத்தினரால் கிளிநொச்சியில் இலவசக் கண்பரிசோதனையும் மூக்குக் கண்ணாடியும் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி முதல் பி.ப.3.00 மணிவரை கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் வைத்து மேற்படி கண்பரிசோதனை இடம்பெறவுள்ளதால் கண்பார்வை குறைந்தவர்கள் நாளை நடைபெறும் கண் பரிசோதனை முகாமில் கலந்து சிகிச்சை பெறுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)

## புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் கழிவுப் பொருட்கள் தேக்கம்!

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதிகளில் கழிவுப் பொருட்கள், குப்பைகள் கடந்த சில நாட்களாக அகற்றப்படாமல் உள்ளது.

புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதிகளின் வீதியோரங்களில் கழிவுப் பொருட்களும், குப்பைகளும் நகர சுத்திகரிப்பாளர்களினால் அகற்றப்படாத நிலையில் வியாபார நிலையங்களின் முன்பாகவும் சந்திப் பகுதிகளிலும் இவ்வாறு குப்பைகள் குவிக்கப்பட்டு அவ்விடங்களிலேயே, எரியூட்டப்படுவதனாலும் தீ விபத்துக்கள் ஏற்படுவதற்கான அபாயமும்காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

## - மூதூர் சம்பவத்தைக் கண்டித்து -

# கொழும்பில் நாளை ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு!

(கொழும்பு)

திருகோணமலை மூதூர் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை கொழும்பில் மாபெரும் ஆர்ப் பாட்டம் ஒன்றை நடாத்த ஜே.வி.பி. திட்டமிட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் நடைபெறவுள்ள இவ் ஆர்ப்பாட்டத்திற்கு ஜே.வி.பி.யின் தலைவர்கள் தலைமை தாங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திருகோணமலையில் தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிரச்சினையைத் தோற்றுவிப்பதில் பல தீய சக்திகள் முனைந்து செயற்பட்டு வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செயலாண்மைக் குழுக்கூட்டம்!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி தமிழ்ச்சங்க செயலாண்மைக் குழுக்கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி கனகபுரம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மு.ப 9.00 மணிக்கு நடைபெறவுள்ள இச் செயலாண்மைக் குழுக்கூட்டத்திற்கு சகல செயலாண்மைக் குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் சங்கச் செயலர் வே.பரமநாதபிள்ளை வேண்டியுள்ளார். (சோ)

### கடற்புலி....

மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பூர்த்தியடையாததால் சந்திப்பு ஒத்தி வைக்கப்பட்டதாக சிறிலங்கா படைத்துறை அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை இது தொடர்பாக இருதரப்பும் தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கு கால அவகாசம் தேவை என்று கூறியதால் இந்தக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக கண்காணிப்புக்குழு பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

### பேச்சுவார்த்தை....

இருந்தமையே இந்த நிலைமையை உருவாக்கியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேச்சுவார்த்தையின் போது தெரிவிக்கப்பட்ட அல்லது தீர்மானிக்கப்பட்ட விடயங்கள் கிரமமாக நிறைவேற்றப்படாமை, அரசு மீதான விடுதலைப்புலிகளின் நம்பிக்கையை குறைத்தெடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகளும் இனவாத அமைப்புகளும் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் சூழ்நிலையில் அரசாங்கம் உடனடிப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திட்டத்தை உடனடியாக வகுக்க வேண்டும் என்றும் மன்னார் ஆயர் வலியுறுத்தியுள்ளார்.

### போர்நிறுத்த....

எனவேதான் நாளைய சந்திப்பை மே மாதம் ஏழாம் திகதிவரை தள்ளிவைத்திருக்கின்றோம். பேச்சுவார்த்தையை ஒழுங்கு செய்யும் நோர்வே நாட்டவரும் அப்படித்தான் விரும்புகின்றனர். இதை ஏற்பதும் சிறிலங்கா அரசையும் விடுதலைப் புலிகளையும் பொறுத்தது என்றார். கொக்லண்ட்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது;

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம அவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதத்தை நாங்களும் வாசித்தோம். அதில் கூறப்பட்டுள்ள விபரங்கள், கருத்துக்கள் தவிர விடுதலைப்புலிகள் புதிதாக ஏதுவும் எங்களிடம் கூறவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் ஏற்கனவே பலமுறை நடப்பதாக இருந்த முக்கிய சந்திப்புக்கள் நடக்கவே இல்லையே என்று கேட்டபோது?

இந்தச் சந்திப்புக்கள் நடக்காமல் இருப்பதை நாங்களும் விரும்பவில்லை. எடுத்துக்காட்டாக விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கருணா சிறிலங்கா அரசின் பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவை மாதாந்த ரீதியில் சந்திப்பதாக இருந்தது. அந்த சந்திப்புக்கள் இடைநிறுத்தப்பட்டதற்கு கருணா கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது என்றார் கொக்லண்ட். அதேபோன்று கடந்த 21ஆம் திகதி மூதூரில் நடப்பதாக இருந்த சந்திப்பும் நடக்கவில்லை. இத்தகைய சந்திப்புகள் நடப்பதையே நாங்களும் விரும்புகின்றோம். அதற்காக கடுமையாக உழைத்து வருகின்றோம் என்றார்.

இதனால் யுத்தநிறுத்தத்தை கண்காணிக்கும் உங்களது பணி ஓரளவு பாதிக்கப்படுமா என்று கேட்டபோது,

எங்கள் பணி யுத்தநிறுத்தத்தை கண்காணிப்பது. பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் பங்கேற்காமல் இருப்பது சரியான சூழ்நிலையை உருவாக்காது தான். அதேவேளை அவர்கள் பங்கேற்பை இடைநிறுத்தித்தான் வைத்துள்ளனரே ஒழிய அதில் இருந்து முற்றாக விலகிவிடவில்லை என்பதைப் பார்க்க வேண்டும் என்றார்.

யுத்தநிறுத்தம் தவிர அமைதி வழிமுறை சீர்குலையும் வாய்ப்பு பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள் என்று கேட்டபோது,

இல்லை இல்லை நான் அப்படி கருதவில்லை. பேச்சுவார்த்தை நடக்காத ஒரு சூழலில் அமைதி வழிமுறை தொடர்வதில் உள்ள சிரமங்களை நாங்கள் உணர்ந்து வைத்துள்ளோம். ஆனால் உலகில் பல இடங்களில் யுத்தநிறுத்தம் என்பது பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகின்றது. ஆனால் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடக்காது விட்டாலும் கூட யுத்த நிறுத்தம் என்பது பேச்சுவார்த்தைக்கான அடிப்படை. எனவே பேச்சு வார்த்தைகள் நீண்டநாள் நடக்காமல் இருப்பதை நாங்கள் விரும்பவில்லை. அவை நடக்கும் என்றே நாங்கள் நம்புகின்றோம் என்றார் கொக்லண்ட்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.